படி வைகையிலிருந்து தண்ணீர் கொடுக்க வாய்ப்புகள் இப்பொழுது இல்லை. வேறு எங்கேனும் மேற்கு நோக்கிப் பாய்கிற நதியிலிருந்து நீரைப் பெற சாத்தியக் கூறுகள் எப்படி இருக்கிறது என்றுதான் ஆராய்ந்துக் கொண்டிருக்கிறோம்.

மேலத்தொண்டியக்காடு இறைவை பாசனத்திட்டம்.

*கு. க. வி. எண் 35—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்கங்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேலத்தொண்டியக்காடு இறைவை பாசன திட்டத்திற்கான திட்டம் தயாராகி விட்டதா ?

(ஆ) ஆம் என்றால், எப்போது நிறைவேற்றப்படும் !

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மேலத்தொண்டியக்காடு இறைவைப் பாசனத் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வுகள் முடிந்த பின்னர் தேவையான மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9.20)

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, இந்த மேலத்தொண்டியக்காடு என்பது என் தொகுதியில் கடலோரத்தில் இருக்கக்கூடிய ஒரு கிராமம். அங்குள்ள நூற்றுக் கணக்கான சிறு விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டுமென்று சொன்னால் ஒரு தனி நபர் தனியாக இறவைப்பாசனம் வைத்து அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை அவர்கள் பெற்று விடுகிறார்கள். ஆகவே இந்த விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். 1978-ம் ஆண்டிலிருந்தே இந்தத் திட்டம் பரிசீலனையில் இருந்து வருவதாக அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தனி நபர் தான் அதிகாரிகளைச் சந்தித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றவிடாமல் செய்து கொண்டிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் துரிதமாக மேலத்தொண்டியக்காடில் நீர்ப்பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்க விரைவில் நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் அரசு உன்னிப்பாகக் கவனம் செலுத்தி விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.